# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1989/13 - 2016 ඔක්තෝබර් මස 18 වැනි අඟහරුවාදා - 2016.10.18

1989/13 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/8/2012/TR/39.
எனது குறிப்பு இல.: NIDS/LND 5/ACQ 64

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

சப்பிரகமுவா மாகாணம் இரத்தினபுரி மாவட்டம் நிவித்திகலை பிரதேச செயலாளர் பிரிவில், நவதுன்கோறளைப் பற்றுவே சிறு பிரிவில், உட கரவிட்ட கிராம அலுவலர் பிரிவில், கரவிட்ட கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராம வரைபட இல. 39, பிற்சேர்க்கை இல. 64, தாள் இல. 83 மற்றும் 2016.08.18 ஆம் திகதிய துண்டு இல. 2197 எனக் காட்டப்பட்ட 0.0506 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டு.

1. துண்டு இல. 2197

காணியின் பெயர்: தெல்கொடகேவத்தஹேன (தெல்கொட கேவத்தஹேன, தெல்கஹவத்தஹேன, பீல்லபடஹேன, கிறாலாகேவத்தஹேன, அரம்பகெவத்தஹேன); ஆரம்ப உரிமை கோருவோர்: விகாரை அதிபதி, உடகரவிட்ட ஸ்ரீ இசிபதனாராமய, உடகரவிட்ட; விஸ்தீரணம்: 0.0506 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு நிவித்திகலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்ட ஈடு பற்றி அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எம். எஸ். அவந்தி சேனாரத்ன,
பிரதேச செயலாளர்,
நிவித்திகலை.

பிரதேச செயலகம்,
நிவித்திகலை.

11 - 93


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.